
# நாரணன் கரம்தன்னில்.



நாரணன் கரந்தன்னில் சுழலும் திருவாழியே - அன்று ,

வாரணம் தன்னைக் காக்கவந்த நீர்வாழியே !

நாரணன் கரந்தன்னில்...

வேகமாய் சுழன்று, சுழன்று வருபவரே ,

மேகம்போல் கருணையை பொழிபவரே ;

மோகமதை அழித்து அருள்புரிந்திடவே - திரு ,

மோகூர் தலமதில் இன்று உறைபவரே !

நாரணன் கரந்தன்னில்....

நோய்கள் நீங்கிட திருவருள்புரிபவரே ,

பேய்பிசாசு தொல்லையை அறுப்பவரே ;

சேய்போன்று மக்களை நீர் காப்பதற்கே - என் ,

வாய்நிறைய உம் புகழ் பாடிடுவேனே !

நாரணன் கரந்தன்னில்......

மின்னல் போன்று என்றும் ஒளிர்பவரே ,

இன்னல் யாவையும் தீர்த்து அருள்பவரே;

உன்னையின்று சரணென்று அடைந்த - பின் ,

என்னையும் காத்து அருள் புரிவாய் நீயே !

நாரணன் கரந்தன்னில்.....